**எயிட்ஸ், கயரோகம் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டம் (ஜீஎப்ஏரீஎம்) - மலேரியா சுற்று 8 கூறு - 2013**

---

எயிட்ஸ், கயரோகம் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டம் (ஜீஎப்ஏரீஎம்) - மலேரியா சுற்று 8 கூறின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்திற்கும் (ஜீஎப்ஏரீஎம்) இடையே 2009 செப்தெம்பர் 17 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட எஸ்ஆர்எல்--809-ஜீ10--எம் ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 13(பீ) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்**

---

மானிய உடன்படிக்கையின் படி, செயற்திட்ட நோக்கெல்லையும் செயற்பாடுகளும், பாதீடு, மைல்கற்கள் மற்றும் குறிகாட்டிகள் அடங்கலாக செயற்திட்ட நிறைவேற்றலிற்கும் அமுலாக்கலிற்கும் சுகாதார அமைச்சு பொறுப்பாக உள்ளது. தற்போது மிகவும் கடுமையாக மலேரியா நோயால் பாதிக்கப்பட்ட இலங்கையில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பின்தங்கிய மக்களுக்கு மத்தியில் மலேரியா கட்டுப்பாட்டை தீவிரப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கையின்படி 8 ஆவது சுற்றுக்கான தீவிர மலேரியாக் கட்டுப்பாட்டுச் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ஐ.அ.டொ. 13,059,866 ஆனதுடன் முழுத் தொகையும் ஜீஎவ்ஏரீஎம் ஆல் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2009 செப்தெம்பர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 ஆகஸ்ட் 31 அளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தல்களினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்

கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்படுகின்ற விரிவான நிதி அறிக்கை மற்றும் செயல் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கஞ்செய்யப்பட்டிருந்தன என்றும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டுத் நியமங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**4 நிதிக்கூற்றுக்கள்**

**4.1 நிதிசார் செயலாற்றல்**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 225,262,893 (ஐ.அ.டொலர் 1,734,716) ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,142,769,557 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| வகுதி | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|---|
| | 2013 | | 2012 | | |
| | ஐ.அ. டொலர் | (ரூபா) | ஐ.அ. டொலர் | (ரூபா) | (ரூபா) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 794,548 | 103,887,202 | 204,637 | 26,021,667 | 189,083,412 |
| மலேரியா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 940,168 | 121,375,691 | 1,331,184 | 169,859,089 | 953,686,145 |
| | 1,734,716 | 225,262,893 | 1,535,821 | 195,880,756 | 1,142,769,557 |

**4.2 காசுப் பாய்ச்சல் கூற்று**

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி காசுப் பாய்ச்சல் கூற்றின் நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பய்ச்சல்** | ஐ.அ.டொலர் | ரூபா | ஐ.அ. டொலர் | ரூபா |
| வெளிநாட்டு உதவி- மானியம் (வாக்குப்பண பேரேடு-13) மற்றும் வெளிநாட்டு உதவி தொடர்புபட்ட | 1,642,138 | 212,000,000 | 1,449,843 | 185,000,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாட்டு நிதிகள் (வாக்குப்பண பேரேடு- 17) என்பனவற்றிலிருந்து பெறப்பட்ட காசு | | | | |
| கேள்வி வருமானத்திலிருந்து பெறப்பட்ட காசு | - | - | 110 | 14,000 |
| நிகழ்ச்சித்திட்ட செலவினங்களிற்காக செலுத்தப்பட்ட காசு | (940,168) | (121,375,691) | (1,331,184) | (169,859,089) |
| வழங்கப்பட்ட முற்பணங்கள் (தேறிய) | 118,936 | 15,551,033 | 324,061 | 41,207,573 |
| செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு (பிடித்துவைத்தல் வரி மற்றும் பிடிகாசு) | (8,291) | (1,108,174) | (947) | (80,403) |
| வெளிநாட்டு நாயணமாற்று நட்டம்/ (இலாபம்) | (8,859) | - | 411 | - |
| | ---------------------- | ---------------------- | ---------------------- | ---------------------- |
| செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு | 803,756 | 105,067,168 | 442,294 | 56,282,081 |
| | ========= | ========= | ========= | ========= |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | |
| நிலையான சொத்துக்கள் | (794,548) | (103,887,202) | (204,637) | (26,021,668) |
| மீளளிக்க வேண்டிய வைப்புக்கள் | - | -24,000 | - | - |
| மீளளிக்க வேண்டிய வைப்புக்கள் - வைப்பகம் | - | - | - | (40,000) |
| | ---------------------- | ---------------------- | ---------------------- | ---------------------- |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | (794,548) | (103,863,202) | (204,637) | (26,061,668) |
| நிதி நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல் (திறைசேரிக்கு திருப்பப்பட்டவை) | (9,208) | (1,203,966) | (237,657) | (30,220,413) |
| | ---------------------- | ---------------------- | ---------------------- | ---------------------- |
| | (803,756) | (105,067,168) | (442,294) | (56,282,081) |
| | ========= | ========= | ========= | ========= |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 135 மற்றும் 2013 சனவரி 21 ஆந் திகதிய எஸ்எவ்ஏ/01/2013 ஆம் இலக்க சுகாதார அமைச்சு சுற்றறிக்கை பந்தி 28 மற்றும் 42 | செயற்திட்ட பணிப்பாளரால் அனுமதிக்கப்பட்ட அதிகார எல்லை ரூபா 2,000,000 ஆக இருந்தது. முரணாக குறிப்பிடப்பட்ட எல்லையை விஞ்சி 7 கொடுக்கல் வாங்கல்கள் ரூபா 91,739,966 கூட்டுமொத்தத் தொகை செயற்திட்ட பணிப்பாளரால் அனுமதிக்கப்பட்டது சுகாதார அமைச்சு செயலாளரால் 2014 ஒக்தோபர் மாதத்தின் மேவுகை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 371 (2)(இ) | முற்பணங்கள் பெறப்பட்டிருந்த போதிலும் இது வழங்கப்பட்ட நோக்கங்கள் பூர்த்தியடைந்த பின்னர் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 20 சந்தர்ப்பங்களில் ரூபா 957,650 தொகையான முற்பணங்கள் தீர்ப்பனவு செய்வதற்கு 4 முதல் 6 மாதங்களிற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்ததென்பது அவதானிக்கப்பட்டது. |
| (iii) இல. 756 | ரூபா 189,083,412 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பில் பௌதீக மெய்மையாய்வு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | மலேரியா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளிற்காக செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள் மற்றும் தொடர்புபட்ட மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

### 5.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

புத்தளம் மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளருக்கு இணைக்கப்பட்ட மோட்டார் வாகனங்களை திருத்துவதற்காக செயற்திட்டத்தால் ரூபா 806,406 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அன்ரி மலேரியாக கூறிற்கு உரிய மோட்டார் வாகனம் சொந்தமான என்பற்கு ஆதாரமான ஆவணச்சான்று கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

## 6. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிற்கான மற்றும் 2013 திசெம்பர் 31 வரை நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2013 ஆண்டு மதிப்பீட்டில் பாதீட்டு ஏற்பாடு | ஆண்டின் போது பெறப்பட்ட நிதிகள் | | 2013 ஆண்டின் போது பயன்படுத்திய தொகை | | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் |
| ஜீஎவ்ஏரீஎம் | 13.059 | 1,498 | 254.56 | 1.285 | 166.0 | 1.272 | 165.34 | 9.190 | 1,203 |
| இலங்கை அரசாங்கம் | - | - | - | - | 46.0 | - | - | - | - |
| | 13.059 | 1,498 | 254.56 | 1.285 | 212.0 | 1.272 | 165.34 | 9.190 | 1,203 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 204 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.568 மில்லியன் பொதுத் திறைசேரியால் பெறப்பட்டிருந்த போதிலும் ரூபா 166 மில்லியன் மாத்திரமே செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதில் செயற்திட்டத்தால் ரூபா 165.35 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) விரிவான திட்டத்தின் பிரகாரம், உலக நிதியத்தல் 2009 செப்தெம்பர் 01 முதல் 2013 திசெம்பர் 31 வரை ஐ.அ.டொலர் 11.626 மில்லயன் விடுவிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 9.914 மில்லியன் செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் ஐ.அ.டொலர் 9.190 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீதி ஐ.அ.டொலர் 627,271 பொது திறைசேரியால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்ட காலப்பகுதியின் 85 சதவீதம் கடந்த பின்னர் அனுமதிக்கப்பட்ட மானியத்தின் 70 சதவீதத்திற்கு சமமான ஐ.அ.டொலர் 9.190 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆதலாவ், மிகுதி 09 மாத செயற்திட்ட காலப்பகுதியில் மீகுதி ஐ.அ.டொலர் 3.89 மில்லியன் பயன்படுத்தப்பட முடியுமா என்பது ஐயததிற்கிடமாக உள்ளது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக உலக நிதியத்தால் செய்யப்பட்ட ரூபா 204,100,000 (ஐ.அ.டொலர் 1,568,393) ஆன மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 166,000,000 தொகை செயற்திட்டத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அதில், 19 சதவீதம் அல்லது ரூபா 39,304,040 தொகை செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 18 நடவடிக்கைகளிற்காக மீளாய்வாண்டின் போது ஒதுக்கப்பட்ட ரூபா 40,001,520 கூட்டுமொத்தத் தொகையாள முழு ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 27 நடவடிக்கைகளிற்காக மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் செயற்திட்டத்திற்காக ரூபா 127,712,520 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 39,338,919 அல்லது 31 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(எ) மேலும், உரிய அதிகாரிகளிடமிருந்து முறையான அனுமதி பெறாமல் 05 நடவடிக்கைகளில் வருடாந்த பாதீட்டை விஞ்சி ரூபா 3,355,778 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மேலும், 09 நடவடிக்கைகளிற்காக மீளாய்வாண்டின் போது செலவழிக்கப்பட்டடிருந்த ரூபா 40,886,254 தொகை செயற்திட்டத்திற்கான வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மலோரியா சுற்று 8 இன் 1 ஆம் கட்டத்தின் கீழ் பூர்த்தியாக்கப்பட்டிருந்த நடவடிக்கைகளில் செயற்திட்டதால் ரூபா 86,551,950 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

**6.3. பௌதீக செயலாற்றல்**

-------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆண்டளவில் உள்நாட்டு மலேரியாவை நீக்குவதே செயற்திட்டத்தின் மலேரியாக் கூறின் நோக்கமாக உள்ளது. எவ்வாறாயினும், மலேரியா பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்திருந்த 95 நபர்களைத் தவிர மீளாய்வாண்டின் போது உள்நாட்டு மலேரியா நோயறிகுறிகள் எதுவும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,700,000 கிரயத்தில் மனிதவள மென்பொருள் பொதியொன்றின் கொள்வனவிற்காக மீளாய்வாண்டின் போது கோள்விகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில், 2013 திசெம்பர் 31 வரை வழங்குநருக்கு கேள்வி விலையில் 75 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 1,275,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறிப்புரை நிபந்தனைகளின் பிரகாரம் வழங்கப்பட வேண்டிய பின்வரும் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(i) இணையதளம் ஊடாக முறைமைக்கு நுழைவதற்கு மாவட்ட அலுவலகங்களிற்கான வசதிகள்.

(ii) தலைமை அலுவலகத்தால் வழங்கப்பட்ட மாவட்ட அலுவலக தகவல்களை பார்க்கும் வசதி.

(இ) வேலைத் திட்டதின் பிரகாரம் 2012 செப்தெம்பர் 30 இற்கு முன்னர் பொலிமற்றஸ் தொடர் எதிர்விளைவுகள் ஆய்வு தாபிக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், அந்த நோக்கத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆய்வு கூட பயன்பாட்டிற்காக ரூபா 4,872,944 பெறுமதியான உபகரணங்கள் ஆய்கூட நிர்மாணத்திலுள்ள தாமதம் காரணமாக பயன்பாடின்றி இருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய உபகரணங்களின் உத்தரவாத காலமும் காலாவதியாகியிருந்தது.

(ஈ) வயம்ப பல்கலைக்கழகத்துடன் அன்றி மலேரியா கட்டுப்பாட்டு பிரச்சார சபையால் கைசாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நுழம்பு ஒழித்தல் கட்டுப்பாடு மீதான நடவடிக்கைகள் 2012 யூன் இல் பூர்த்திசெய்யப்பட்ட வேண்டும். எவ்வாறாயினும், சில நடவடிக்கைகள் 2014 ஆகஸ்ட் வரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் மீதான நிதிக் கட்டுப்பாடுகள் திருப்திகரமாக அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 1,609,523 பெறுமதியான முற்பணங்கள் மதிப்பீடுகள் பெற்றுக்கொள்ளாமல் 49 சந்தர்ப்பங்களில் மிகையாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் செயற்திட்டத்தின் நிதிக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கில் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) பொருட்களின் கொள்வனவு
(இ) பொருளிருப்பு பதிவேட்டின் பேணுகை
(ஈ) கட்டுநிதி மற்றும் முற்பணங்களைத் தீர்த்தல்
(உ) கணக்கீடு
(ஊ) நிதி முகாமைத்துவம்